/ பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் /

மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் அலுவலகம், தூத்துக்குடி.

ஓ.மு.எண். 3690/அ4/07 நாள் 12.7.07.

பொருள்– தகவல் அளிக்கும் உரிமைச்சட்டம்– 2005– ரோம் கத்தோலிக்க நடுநிலைப்பள்ளி– தகவல் அளித்தல்– சார்பு.

பார்வை தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் தகவல் அளிக்கும் அலுவலரின் செயல்மறைகள் ந.க.எண். 18899/எச்3/07, நாள் 26.6.07.

.........

பார்வையில் கண்ட இயக்குநரின் செயல்முறைகளுடன் பெறப்பட்ட மனுவில் கோரப்பட்ட தகவல்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண். | கேள்வி | தகவல் |
|---|---|---|
| 1 | ஆர்.சி.பள்ளிகள் கண்காணிப்பாளரால் முறையற்ற மாறுதல்கள், காலமுறை ஊமிதய உயர்வு வழங்கப்படாமை, விதிக்குப்றும்பான பிடித்தங்கள், கட்டாய நன்கொடை, தற்காலிக பணிநீக்கம், பணி நீக்கம் மற்றும் பல மன உளைச்சல்கள் சார்பாக துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை | ஆர்.சி.சிறுபான்மை கூட்டு மேலாண்மை பள்ளிகளின் விதி 1977ன்படி பள்ளி உள் விவரகாங்களில் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் விதிகளின்படி தலையிட இயலாது. மேலும் கூறப்பட்ட புகார்கள் சார்பாக எழுத்து பூர்வமாக பாதிக்கப்பட்ட ஆசிரியர், பெயர், பள்ளி போன்ற விவரங்களுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களால் புகார் அளிக்கப்படும் பட்சத்தில் உடன் விகிதளிப்டி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 2 | கூட்டணி நிர்வாக வேண்டுகோளின்படி, அரசு மேற்காண் புகார் சார்பாக நீதிமன்ற ஆணையின்படி, மேற்படி பள்ளிகளுக்கு நேரடி மானியம் வழங்கப்பட வேண்டும். | எந்தெந்த பள்ளிகளுக்கு நேரடி மானியம் வழங்கப்பட வேண்டுமோ, அந்தந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், என்ன காரணத்திற்காக நேரடி மானியம் வழங்கப்பட வேண்டும் என்பதனைத் தெளிவாக குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமையாசிரியர் மற்றும் உதவித்தொடக்கக்கல்வி அலுவலர் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டால், விதிகளின்படி உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 3 | ஆர்.சி.நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும் விதிகளுக்கு புறம்பான ஊதிய பிடித்தங்கள், முறையற்ற நியமன ஒப்புதல் வழங்குவதை தடுக்க மாவட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணை வழங்க வேண்டல். | பள்ளியின் பெயர், ஆசிரியர் பெயர், எவ்வளவு தொகை விதிக்குப்புறம்பாக என்ன காரணத்துக்கு பிடித்தம் செய்யப்பட்டது. மேலும் விதிக்கு புறம்பாக எந்த ஆசிரியர் நியமனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது போன்ற முழு விவரங்களுடன், ஆதாரங்களுடன் தெரிவித்தால் உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

..........2....